**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

25.02.2025

***பிள்ளைகளின் தமிழ்மொழிக் கல்விக்கான பெற்றோரின் நேர்மையான கரிசனையை எதிர்பார்க்கிறோம்!***

*அன்பான பெற்றோர்களே,*

***மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வியில் நாம் அனைவரும் கொண்டுள்ள ஆழமான அக்கறையின் அடிப்படையிலும், இளைய குமுகாயத்தின் எதிர்கால நலனையும் ஆழமாகக் கருத்திற் கொண்டு உறுப்பினர் உரிமைகள் நீக்கப்பட்டவர்களை எமது நிருவாகத்தோடு வந்து கலந்துரையாடுமாறு அழைப்பு விடுகின்றோம்.***

***ஒரு நிறுவனமானது எதிர்காலத் திட்டமிடலுடன் அனைவரையும் கட்டுக்கோப்புடன் நடத்தும் செயலாக்கத்திறன் மிக்கதாக இருப்பது அவசியம். எனவே, முரண்பாடுகளை உரிய முறையில் பேசித் தீர்க்கும் வழிவகைகளைக் கையாள்வது இன்றியமையாதது. மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வியை கருசனையில் கொண்டு பல தடவைகள் பெற்றோர்களை அழைத்துள்ள போதிலும் அவற்றைத் தட்டிக்கழிக்கும் அவர்களது நடவடிக்கை எமக்கு வியப்பாக உள்ளது.***

***பிள்ளைகள் தமிழ்மொழிக் கல்வியை இழந்துவிடக்கூடாது என்ற ஆழமான கருசனையுடன், அங்கத்தவர்களாக மாணவர்கள் இருப்பதால் அவர்களின் பெற்றோர்களுக்கு மீண்டும் ஒர் அன்பான அழைப்பை விடுத்துநிற்கிறோம்.***

*எமது நிறுவனமானது தமிழ்மொழியுடன் மட்டும் நின்று விடாது தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைத் தக்கவைக்கும் பணியைச் செய்வதால்,*

முரண்பாடுகள் ஏற்படும் வேளையில் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை எப்போதும் திறந்தே வைத்திருக்கும் என்பதனைத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

எதிர்காலத் தலைமுறையின் நலனுக்காக பிள்ளைகளின் தமிழ்மொழிக் கல்வியின் தொடர்ச்சிக்கு முக்கியமான முடிவை எடுக்கும் நிலையில், பெற்றோராகிய அவர்களே இருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே, தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக விளக்கமாகப் பேச, அவர்களை விழித்து நிற்கின்றோம். மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வி மேம்பாட்டில் ஆர்வமும் அக்கறையும் உள்ள பெற்றோர்கள் நல்லதோர் தீர்வை நோக்கி நகர்வதற்காக, கிடைக்கப்பெறும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவார்கள் என நம்புகிறோம்.

நாம் ஏற்கனவே 30.11.2024 திகதியிடப்பட்ட கடிதத்தில் அனைவருக்கும் அறியத்தந்ததற்கு அமைய அன்னையின் ஆவணங்கள் சிலவற்றையும் அங்கத்தவர்களின் விவரங்களையும் அன்னை நிறுவனத்திற்குத் தெரியாமல் எடுத்து, தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கும் நிறுவனப்பண்புகள், சட்டநெறிகளுக்கு மாறாகச் செயற்பட்டுக் கொண்டு நிறுவன நடைமுறைகளையும் யாப்பு விதிமுறைகளையும் மீறி நடந்து கொள்பவர்களுக்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

இதன் அடிப்படையிலேயே 13.02.2025 முதல் காலக்கெடுவுடன் இவர்களுக்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வழங்கப்பட்ட காலக்கெடுவின் விபரம்:

இந்தத் தீர்மானத்தை மீண்டும் பரிசீலிக்க பின்வரும் நடவடிக்கைகள் 20.02.2025 இற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

- நிறுவனத்திற்கு எதிரான தங்கள் செயல்களுக்கு, குறிப்பாக 'அனுமதி இல்லாத குழுவின் உறுப்பினராக செயல்பட்டது' பிழையானது என்பதை பொறுப்பேற்று ஒரு பொதுவான அறிக்கை வெளியிட வேண்டும்.(வெளிப்படையான அறிக்கை: அன்னை பூபதி நிறுவனத்தில் நிருவாகத்தினர், அங்கத்தவர், ஆசிரியர்களுக்கு அறிவிக்கக் கூடிய வகையில் அறிக்கையில் வெளிப்படைத்தன்மை இருத்தல் வேண்டும்.)

- நிறுவனத்தின் விதிமீறலாக உள்ள செயல்களில் இருந்து விலகி, நிறுவனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தவேண்டும். அதில் செல்லுபடியாகாத கூட்டங்கள் மற்றும் குழுக்களில் பங்கேற்பதும் உள்ளடங்கலாக அமையப்பெற வேண்டும்.
- எங்களுடன் தொடர்புகொண்டு ஒரு சந்திப்பை 24.02.2025 இற்கு முன் ஏற்படுத்த வேண்டும். அச்சந்திப்பில் அங்கத்துவ நீக்கத்திற்கு மாறாக நிறுவனப் பண்புகளுக்கு உட்பட்டு யதார்த்தபூர்வமான வேறு நடவடிக்கைகள் குறித்து ஆராய சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மேற்கூறிய எதனையும் கருத்திற்கொள்ளாமல், மீண்டும் இவர்கள் தங்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்தியும், அன்னையுடன் நேரடிச்சந்திப்பிற்கு வருவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை என்ற வகையில் எழுதிய பதிலானது, மாணவர்களின் எதிர்காலத்தை முழுமையாகப் பாதிக்கும் என்ற வகையில் நாம் வருத்தமடைகிறோம்.

அன்னை பூபதி நிறுவனத்திற்கு எதிரான இவர்களது செயற்பாடுகள் மிகவும் கடுமையாக இருந்த போதிலும், நாம் பலவழிகளில் அவற்றை சனநாயக வழியில் தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் எவையும் பலனளிக்கவில்லை.

இறுதியாக அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் இவர்களின் பிள்ளைகளின் தாய்மொழிக் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அவர்களுக்கான நடவடிக்கைகளைக் காலக்கெடுவுடன் வழங்கியது. அப்பொழுது கூட, தங்கள் பிள்ளைகளின் நலனைக் கருதாது, சிலரின் உள்நோக்கங்களைப் புரியாமல் அவர்களும் தொடர்ந்து செயற்படுவது கவலைக்குரியதாகப் பார்க்கப்படுகின்றது.

எமது எதிர்காலச் சந்ததியினர் தமிழ்மொழி, கலை, பண்பாடு, வரலாறு என்பவற்றை தமது அடையாளங்களுடன் பேண வேண்டும் என்ற உயரிய நோக்குடனே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றை நேர்த்தியான முறையில் தொடர்ந்து கடத்துவதே எமது குறிக்கோள் ஆகும். இவர்களது தேவையற்ற பிடிவாதத்தால் பிள்ளைகளது தமிழ்மொழிக் கல்வி தடைப்படுவதை எண்ணி நாம் வருத்தத்தை வெளியிடுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. குறித்த பெற்றோர்களது

*முறையற்ற நடவடிக்கையே இந்நிலைக்குக் காரணம் என்பதை மிகுந்த வருத்தத்துடன் பதிவுசெய்ய விரும்புகிறோம்.*

*தற்போது நடந்தேறும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது நிறுவனம் பொறுப்பாளர்களாக இருக்க முடியாது என்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம்.*

***பிள்ளைகளின் எதிர்கால நலனை முன்னிறுத்தி, உரிய பெற்றோர்கள் மிகவும் நிதானமாகச் சிந்தித்து, செயற்பட்டு, எமது வினயமான அழைப்பை உதாசீனம் செய்யமாட்டார்கள் என நம்புகிறோம். ஒரு நிறுவனத்தின் நற்பண்பாக கலந்துரையாடல்களே அமையும் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.***

***இவர்களுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து அங்கத்துவநீக்கம் செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் விரும்பியபோது எம்மைத் தொடர்புகொண்டு, சந்திப்பினை ஏற்படுத்தி உரிய முறையில் தீர்வுகளைக் கண்டு, தங்கள் பிள்ளைகளின் அங்கத்துவத்தை மீள் உறுதிப்படுத்த முடியும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றோம்.***

***«தமிழ் எங்கள் அடையாளம்»***

*இவ்வண்ணம்*
*தலைமை நிர்வாகம் 2025*
*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்*